# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு - II

பகுதி 2

Kerala Reader - Tamil

Standard - II

Part 2

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

2015

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

***Prepared by*** :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2015

© Government of Kerala • Department of Education

# மலரும் முல்லை மொட்டுகளே!

இந்நூலில்
உங்களுக்கு விருப்பமான
கதைகள் உள்ளன;
பாடல்கள் உள்ளன;
தனித்தும்
உங்கள் நண்பர்களோடும்
சேர்ந்தும் செயல்பட
ஏராளம் செயல்பாடுகள் உள்ளன.
வரைந்தும் வாசித்தும் எழுதியும் வளர
வாசற்கதவு
இதோ...
உங்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.
தேன் தேடும் பட்டாம்பூச்சியாய்ப்
பறந்து பறந்து அறிவுத்தேன் எடுக்க
இந்நூல் உங்களுக்காக
வடிவமைக்கப்பட்டுள்ளது.
தங்கள் கற்றல் சிறக்க வாழ்த்துகள்.

முனைவர். எஸ். இரவீந்தரன் நாயர்,
இயக்குநர்,
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவனந்தபுரம்.

# Textbook Development Committee

## Tamil (Part - 2)

*Members*

**Anesha Banu. A. K,**
LPSA, GSLPS, Fort,
Thiruvananthapuram.

**Krishnamoorthy.M,**
PD Tr., GLPS, Kunnamkattupathy,
Palakkad.

**Robert Xavier.M,**
Headmaster, ALPS, Attempathy,
Palakkad.

**Babu.S,**
PD Tr., GLPS,
Devikulam, Idukki.

**Muniyandi.K,**
LPSA, GHS, Meenachipuram,
Palakkad.

**Selvi.V,**
LPSA, GFLPS, Managud,
Thiruvananthapuram.

**Beula Elezabeth.A,**
UPSA, GUPS,Malakkappara,
Trichur.

**Prakasam.P,**
LPSA, ALPS, Kallaar Munnar,
Idukki.

**Thankaraju.T,**
LPSA, G.H.S., Meenachipuram,
Palakkad.

**Dominic Savio.J,**
HSA, SFXHS, Parisakkal,
Palakkad.

**Rajendren. G,**
UPSA, GHSS, Kozhippara,
Palakkad.

*Experts*

**Dr. Ratnasabapathy.P,**
Prof.(Rtd.), Chennai.

**Dr. Sethupandian.T,**
Prof., (Rtd.), M.K. University, Madurai.

**Dr. Veerappan.P,**
Prof., (Rtd.), NCERT, Mysore.

**Dr. Gomathynayagam.E,**
Guest. Lr, University of Madras, Chennai.

*Artists*

**Nandhakumar.C,**
Chittur, Palakkad.

**Rakesh P Nair,**
Neyyar Dam, Thiruvananthapuram.

*Academic Co-ordinator*

Dr.Sahaya Dhas.D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்

5. சுவடி வாழுது இங்கே!......... 102 - 126

6. மந்திர மழை ..................... 127 - 146

7. பசித்துப் புசி ........................ 149 - 168

8. பூம் பூம் வண்டி.................. 169 - 192

# 5

# கூடி வாழுது இங்கே!





# வானம் என் மைதானம்


“குர்ர்... குர்... குர்ர்....”

என்ன நான் பேசுவது புரியவில்லையா?

கவலைப்படாதீர்கள். உங்கள் மொழியிலேயே பேசுகிறேன்.

படத்தில் பார்க்கவே அழகாக இருக்கிறேன் இல்லையா? நேரில் பார்க்க இன்னும் அழகாக இருப்பேன்.

நான் புறா. மாடப்புறா. உயரமான இடங்களில் வசிப்பதுதான் எனக்குப் பிடிக்கும்.



கோயில்களின் உச்சியில் என்னைக் காணலாம். அடுக்குமாடிக் கட்டடங்களின் உச்சியிலும் காணலாம். புள்ளிப் புறாவும் மணிப்புறாவும்

என் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தாம்.


நான் நீண்ட நேரம் நில்லாமல் பறப்பேன். சென்ற வழியை மறக்கமாட்டேன்.

அதனால் அரசர்களுக்கு என்னைப் பிடிக்கும். செய்தியை எழுதி என் காலில் கட்டி விடுவார்கள். நான் அச்செய்தியைத் தூர இடங்களுக்குக் கொண்டு சேர்ப்பேன்.

ஆனால் இதெல்லாம் அன்று. இன்று யாரும் தூது அனுப்ப என்னைப் பயன்படுத்துவதில்லை.

என்னைப் பற்றி நிறைய கதைகள் கேட்டிருப்பீர்கள்.

அதில் ஒரு கதை இதோ...!




ஐயோ...!
ஐயோ...! யாராவது ஓடி வாங்க! காப்பாத்துங்க!
அங்கே என்ன சத்தம்?
இந்தா... இந்த இலையில் ஏறி தப்பு...
கரையில் ஏறுவது எப்படி?
கையைப் பிடித்து ஏறு!




நாட்கள் சென்றன....
ஒரு நாள்....
ஆஹா... ஒரு கல்லில் மூன்று மாம்பழங்கள்!
ஐயோ... ! என் நண்பன் புறாவிற்கு ஆபத்தா?
ஐயோ... ! என் இறக்கை போச்சே...
ஐயோ... !
என் நண்பனையா அடிக்கப் பார்க்கிறாய்?


## கதை சொல்லுங்கள்

- படங்களைப் பார்த்துக் கதை சொல்லுங்கள்.
- கதைக்கேற்ற தலைப்பு எழுதுங்கள்.
- என்னைப் பற்றி வேறு என்னென்ன கதைகள் தெரியும்? அவற்றையும் சொல்லுங்கள்.

## என்னைப் பற்றி..

நான் புறா.
மாடப்புறா. வெண்புறா.
வானத்தில் பறப்பது எனக்கு
மிகவும் பிடிக்கும்.





நான் மயில். வண்ண மயில்.



## சொல்லுங்கள்

- உனக்குப் பிடித்த பறவை எது? ஏன்?
- உங்கள் வீட்டில் என்னென்ன பறவைகளை வளர்க்கிறீர்கள்?
- உங்கள் வீட்டில் என்னென்ன பிராணிகளை வளர்க்கிறீர்கள்? ஏன்?
- உனக்குப் பிடித்த பிராணி எது? ஏன்?
- உன் செல்லப் பிராணியின் பெயர் என்ன?

## எழுதுங்கள்


- கீழ்வரும் சொற்களைப் பயன்படுத்தி உங்களால் எத்தனை வாக்கியங்கள் உருவாக்கமுடியும்?

| | | |
|---|---|---|
| மயில் | வேகமாக | நடக்கும் |
| கிளி | அழகான | விலங்கு |
| மான் | மெல்ல | பறக்கும் |
| புறா | பெரிய | ஓடும் |
| யானை | பறவை | முயல் |

- **மான் வேகமாக ஓடும்.**
- ..................................................................................
- ..................................................................................
- ..................................................................................
- ..................................................................................
- ..................................................................................
- ..................................................................................

## வரையுங்கள்

- புள்ளிகளை இணைத்துப் படம் வரையுங்கள்;
  பொருத்தமான வண்ணம் தீட்டுங்கள்.




## எழுதுங்கள்

- கதையை வரிசைப்படுத்தி எழுதுங்கள்

| | |
|---|---|
| ☐ | அது ஆற்றங்கரையிலுள்ள மரத்தில் அமர்ந்தது. |
| ☐ | புறா எறும்பைக் காப்பாற்ற நினைத்தது. |
| 1 | புறா பறந்து வந்தது. |
| ☐ | ஆற்றில் தத்தளிக்கும் எறும்பைப் பார்த்தது. |
| ☐ | புறாவிற்கு நன்றி சொன்னது. |
| ☐ | எறும்பு இலையில் ஏறித் தப்பியது. |
| ☐ | மரத்திலிருந்து இலையைக் கிள்ளி ஆற்றில் போட்டது. |

# வழியொன்று சொல்லுங்கள்




புறா வலியால் துடித்தது. நடக்க முடியவில்லை.

பசியும் தாங்க முடியவில்லை. அது வழியில் ஒரு மீனைச் சந்தித்தது.



மீண்டும் புறா நொண்டி நொண்டி நடந்தது...

தலை சுற்ற ஆரம்பித்தது. அப்பொழுது அதோ ஒரு ஆடு...




## சொல்லுங்கள்


- வேறு எந்தெந்தப் பிராணிகளிடம் புறா வழி கேட்டிருக்கும்?
- அவர்களிடம் எப்படிக் கேட்டிருக்கும்?
- அவை அதற்கு எப்படிப் பதில் கூறியிருக்கும்?
- பிராணிகள் எல்லாம் புறாவை வனிதாவின் வீட்டிற்கு ஏன் போகக் கூறின?
- உங்களிடம் கேட்டிருந்தால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

## எழுதுங்கள்

புறா பசுவைப் பார்த்தது.

- அதனிடம் எப்படி வழி கேட்டிருக்கும்?
- பசு என்ன பதில் சொல்லியிருக்கும்?





## யார் யார்?

“வனிதாவின் புகழ் எங்கும் பரவியது. அவளைக் காணச் சிலர் பறந்து வந்தனர். வேறு சிலர் ஊர்ந்து வந்தனர். மற்றும் சிலர் நீந்தி வந்தனர். மற்றும் சிலர் நடந்து வந்தனர். வனிதாவின் வீட்டைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர்.”

- யார் யார் வந்திருப்பார்கள் ?

| பறந்து வந்தவர்கள் | நீந்தி வந்தவர்கள் | ஊர்ந்து வந்தவர்கள் | நடந்து வந்தவர்கள் |
|---|---|---|---|
| | திமிங்கலம் | | |
| | | | யானை |
| காகம் | | | |
| | | பாம்பு | |
| | | | |
| | | | |

நீங்கள் எழுதியவற்றுள்...

- ஒவ்வொரு குழுவிலும் எத்தனை பேர்? ______
- எந்தக் குழுவில் வந்தவர்கள் அதிகம்? ______
- அதிகம் வந்தவர்கள் எத்தனை பேர்? ______

## பூர்த்தி செய்யுங்கள்

கீழ்க்காணும் பிராணிகளுக்கிடையே என்னென்ன வித்தியாசங்கள் உள்ளன?

| யானை | ஆமை | முதலை |
|---|---|---|
| காட்டில் வாழ்கிறது | ........................................ | ........................................ |
| ........................................ | கெட்டியான ஓடு உண்டு | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |

## பாடி மகிழ

பட்டுப் போல சட்டைப் போட்ட
பட்டாம் பூச்சியே! - நீ
சிட்டுப் போல பறப்பதெங்கே
பட்டாம் பூச்சியே?

வானில் பறக்கும் பூவைப் போல
நீயும் இருக்கிறாய் - காணும்
பூவிலுள்ள தேனையெல்லாம்
ஏன் எடுக்கிறாய்?

வான வில்லின் ஏழு நிறம்
உந்தன் சிறகிலே - உன்னைக்
காண வந்த என்னைக் கண்டு
பறந்து செல்வதேன்?

விலை கொடுத்து பூவும் வாங்க
வழியும் இல்லையே - என்
தலையில் கொஞ்சம் பூவைப்போல
இருந்து செல்வாயோ?

## என் செல்லப் பிராணி

- என் செல்லப் பிராணி எது தெரியுமா?
- அது எப்படியிருக்கும் தெரியுமா?
- ஏன் பிடிக்கும் தெரியுமா?

காரணம்: 1

காரணம்: 2

- ஒரு சுவையான நிகழ்ச்சியைச் சொல்லட்டுமா?



# வனிதாவின் வீடு

வனிதா வீட்டுக்கு வாருங்கள் - அங்கு
வாழும் நண்பரைப் பாருங்கள்.
கூடுகள் ஒன்றும் இல்லை - அவை
கூடி வாழுது இங்கே!

பழத்தைக் கொறிக்கும் அணிலும் - வந்து
அழகாய்க் கையில் இருக்கும்.
வானில் பறக்கும் புறாக்கள் - அவை
தோளில் அமர்ந்தே சிரிக்கும்!



பாலைக் கொடுக்கும் பசுவும் - அவள்
கொடுக்கும் குரலுக்குச் செவிசாய்க்கும்.
துள்ளிக் குதிக்கும் கன்றோ - அவள்
கூடச் சேர்ந்தே நடக்கும்!

முட்டை போடும் கோழி - அவள்
கொடுக்கும் நீரைக் குடிக்கும்.
தலையைத் தலையைத் தூக்கி - அவள்
முகத்தைப் பார்த்தே சிரிக்கும்!

ஆட்டுக்குட்டி அவள் செல்லம் - தலை
ஆட்டி ஆட்டிப் பின்செல்லும்.
மே மே எனக் கத்திக் கத்தி - அவள்
கேள்விக்குப் பதிலைச் சொல்லும்!



## பாடுங்கள்

- பாடலுக்கேற்ற மெட்டமைத்துப் பாடுங்கள்.
- எத்தனை மெட்டுக்களில் பாட முடியும்?
- பாடலிலுள்ள எத்தனை வரிகளை உங்களால் பாராமல் பாட முடியும்?

## சொல்லுங்கள்

- இப்பாடலை யார் பாடியிருப்பார்கள்?
- பாடலில் எத்தனை பிராணிகள் உள்ளன?
- இவையல்லாமல் வனிதாவின் வீட்டில் வேறு என்னென்ன பிராணிகள் இருக்கும்?

## கண்டுபிடியுங்கள்

- பொருத்தமான ஒலித் துணைக் குறியீடுகள் சேர்த்துக் கீழ்க்காணும் சொற் களில் உள்ள பிராணிகளை முதலில் கண்டுபிடிப்பது யார்?

| | | | |
|---|---|---|---|
| அணல | | கழ | |
| பற | | ஆடடககடட | |
| பச | | நய | |

## எத்தனை வாக்கியங்கள்?

கொடுக்கும் நீரைக் குடிக்கும்

முகத்தைப் பார்த்தே சிரிக்கும்.

- இது போல் எத்தனை வாக்கியங்களை ஐந்து நிமிடத்திற்குள் உங்களால் எழுத முடியும்?

## கண்டுபிடியுங்கள்


இரு**க்கும்** - சிரி**க்கும்**

- இது போல் **க்கும்** என்று முடியும் எத்தனை இணைச் சொற்கள் பாடலில் இடம் பெற்றுள்ளன?

- இது போல் வேறு எழுத்துகளில் முடியும் எத்தனை இணைச் சொற்கள் பாடலில் உள்ளன?

## பாடிமகிழ


தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப் பசு
உடன் அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப் பசு
பாலை நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப் பசு
மடிமுட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி





# எங்கே என் செல்லக்குட்டி?

“கொக்கரக்கோ... கோ...” சேவல் கூவியது. கீழ்வானம் சிவந்தது. வனிதா கண்விழித்தாள்.



செல்லப் பிராணிகளுக்கு உணவளிக்க வெளியே வந்தாள்.

“பா.. பா.. பா...” என்று அழைத்தாள். கோழிக்குஞ்சுகள் ஓடிவந்தன. வனிதா தட்டிலிருந்து தானியங்களை வாரினாள். அவற்றின் முன் இறைத்தாள். அவை உணவைக் கொத்திக் கொத்தித் தின்றன. கீ.. கீ.. என நன்றி கூறின.

பசு, நாய், பூனை... என வீட்டிலுள்ள அனைத்திற்கும் உணவிட்டாள்.

ஆனால் ஒருவரை மட்டும் காணோம்.



“மே...மே... ஏய் செல்லக்குட்டி... அழகு ஆட்டுக்குட்டி...

உனக்கு இலைகள் வைத்திருக்கிறேன். ஓடி வந்து சாப்பிடு”


வனிதா உரக்கச் சொன்னாள். ஆனால் ஆட்டுக்குட்டி வரவில்லை.

‘ஆட்டுக்குட்டி எங்கே போனது?’ வனிதா கொட்டிலுக்குப் போனாள். ஆட்டுப் பட்டி காலியாக இருந்தது.



பூனையும் தேடியது. நாயும் தேடியது. சுற்றும் முற்றும் பார்த்தன. அங்கும் இங்கும் தேடின. எங்கும் இல்லை. வருத்தத்தோடு வனிதாவைச் சூழ்ந்து நின்றன. வனிதாவின் மனதில் கவலை படர்ந்தது. கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

“என் ஆட்டுக்குட்டி எங்கே? காட்டுக்குப் போயிருக்குமோ? ஐயோ ... ஓநாயோ, புலியோ அடித்துக் கொன்றிருக்குமோ?” வனிதா வாய்விட்டு அழுதாள்.





“அழாதே... அப்படி எதுவும் நடந்திருக்காது. நான் ஒரு நொடியில் கண்டுபிடித்து வருகிறேன்.” அவள் தோளில் அமர்ந்திருந்த புறா கூறியது. ‘ஜிவ்’ என்று பறந்தது. அது ஐந்தே நிமிடத்தில் திரும்பி வந்தது.

“செல்லக்குட்டிக்கு ஆபத்து! என்னைத் தொடர்ந்து வாருங்கள்.”

புறா முன்னால் பறந்தது. அனைவரும் ஓட்டமும் நடையுமாக அதைப் பின்தொடர்ந்தனர்.

“எங்கே போகிறீர்கள்? ஏதேனும் ஆபத்தா?” கலைமான் கேட்டது.

“ஆம், எங்கள் நண்பன் ஆட்டுக்குட்டிக்கு ஆபத்து” நாய் சொன்னது.

“அப்படியா, நானும் வருகிறேன்” மானும் சேர்ந்து கொண்டது.

“அதோ... செல்லக்குட்டி!” புறா சுட்டிக் காட்டியது. எல்லோரும் அங்கே பார்த்தார்கள்.



ஒரு முட்புதருக்குள் ஆட்டுக்குட்டி. சிக்கியிருந்தது!

நண்பர்களைப் பார்த்ததும் “மே... மே...” என்று அழுதது.

வனிதா முட்புதரை விலக்க முயன்றாள்.

“ஆ...” வெடுக்கெனக் கையை இழுத்தாள்.

“வனிதா... தள்ளி நில். நான் பார்த்துக்கொள்கிறேன்”

கலைமான் முன்னால் வந்தது.

தன் கொம்பால் முள்ளை விலக்கியது.

நாய் வாயால் முள்ளைக் கௌவி இழுத்தது.

கொஞ்சம் இடம் கிடைத்தது.



ஆட்டுக்குட்டி துள்ளி வெளியே வந்தது.

“ஹேய்...” எல்லோரும் மகிழ்ச்சிக் குரல் எழுப்பினர்.

வனிதா ஓடிச் சென்றாள்.

“என் செல்லமே..!” என்று கட்டியணைத்தாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

கண்ணீரைத் துடைத்தாள். காயம்பட்ட இடங்களைத் தடவிக்கொடுத்தாள்.

ஆட்டுக்குட்டி அவளோடு நெருங்கி நின்றது.

“மானே.. கலைமானே.. உன் உதவியை மறக்க மாட்டேன்.”

வனிதா மானுக்கு நன்றி சொன்னாள்.

எல்லோரும் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.



## சொல்லுங்கள்

- உங்கள் வீட்டுச் செல்லப் பிராணி காணாமல் போனதுண்டா?
- அதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?
- எங்கெல்லாம் தேடினீர்கள்?
- அதைக் கண்டுபிடிக்க யார் யார் உதவினார்கள்?
- கண்டுபிடித்தபின் என்ன செய்தீர்கள்?

## எழுதுங்கள்

- பாடப்பகுதியில் என்னென்ன பிராணிகள் வந்துள்ளன?

.................................................................. ..................................................................

.................................................................. ..................................................................

.................................................................. ..................................................................

.................................................................. ..................................................................

.................................................................. ..................................................................

## வகைப்படுத்துங்கள்

- கீழே கொடுக்கப்பட்டுள்ள முறையில் அவற்றை வகைப்படுத்துங்கள்.

| காட்டில் வாழ்பவை | வீட்டில் வளர்ப்பவை |
|---|---|
| | |

காட்டில் வாழ்பவை அதிகமா? வீட்டில் வளர்ப்பவை அதிகமா?

## சொல்லுங்கள்

- வனிதாவின் வீட்டிலிருந்து காணாமல் போன செல்லப் பிராணி எது?
- அதை எங்கெல்லாம் தேடினார்கள்?
- அதைக் கண்டுபிடிக்க யார் யார் உதவினார்கள்?
- எப்படிக் காப்பாற்றினார்கள்?
- கண்டுபிடித்தபின் என்ன செய்தார்கள்?

## எப்படிச் சொல்லியிருப்பாள்?

"மே...மே... ஏய் செல்லக்குட்டி... அழகு ஆட்டுக்குட்டி...
உனக்கு இலைகள் வைத்திருக்கிறேன். ஓடி வந்து சாப்பிடு"
வனிதா உரக்கச் சொன்னாள்.

- இது போல் பசு, பூனை, நாய், கோழி ஆகியவற்றை எப்படி அழைத்திருப் பாள்?
- என்ன உணவு வைத்திருப்பதாகச் சொல்லியிருப்பாள்?

பசு

பூனை

நாய்

கோழி

## நான் உருவாக்கிய சொற்கள்

கீழ்க்காணும் எழுத்துகளுடன் பொருத்தமான ஒலித்துணைக் குறியீடுகள் சேர்த்து உங்களால் எத்தனை சொற்கள் உருவாக்க முடியும்?

**மடட**

முட்டை, மொட்டை, மட்டை,

மூட்டை, மாட்டை, மீட்டு,

மெட்டு, மேட்டை

**படட**

**சடட**

**தடட**

**கடட**

**வடட**

கதை நேரம்

# வௌவாலின் தந்திரம்



ஒரு காட்டில் பறவைகளும் விலங்குகளும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. காட்டில் வறட்சி ஏற்பட்டது. பறவைகளும் விலங்குகளும் பசியால் வாடின. சிறிது உணவோ தண்ணீரோ கிடைத்தால் பறவைகளும் விலங்குகளும் அதற்காகச் சண்டையிட்டன.

இறுதியில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. சண்டை நின்றது. தரையிலுள்ள உணவுகளை விலங்குகளும் மரங்களில் விளையும் உணவுகளைப் பறவைகளும் உண்ணலாம். இதை மீறுபவர் மரத்தில் தலைகீழாகத் தொங்க விப்படுவர் என்பதே ஒப்பந்தம்!

அன்று இரவு வௌவால் பறவைகளுக்குத் தெரியாமல் விலங்குகளிடம் சென்றது.

“நண்பர்களே பறவைகளைப் போல் நான் முட்டையிடுவது இல்லை. குட்டி தான் போடுகிறேன். எனவே என்னை உங்கள் இனமாகக் கருதி தரையிலுள்ள வற்றைச் சாப்பிட அனுமதிக்க வேண்டும்.” என்றது.

விலங்குகளும் சம்மதித்தன. தங்கள் குழுவில் சேர்த்துக்கொண்டன. வௌவால் தரையிலுள்ள உணவுகளைச் சாப்பிடத் தொடங்கியது.

மறுநாள் விலங்குகளுக்குத் தெரியாமல் பறவைகளிடம் சென்றது. “பறவைகளே என் இறக்கைகளைப் பாருங்கள். யாராவது என்னைப் பறவையல்ல என்று சொல்வார்களா? எனவே என்னை உங்கள் இனமாகக் கருதி மரத்தில் விளையும் உணவுகளைச் சாப்பிட அனுமதிக்க வேண்டும்.” என்றது.



பறவைகளும் சம்மதித்தன. தங்கள் குழுவில் சேர்த்துக்கொண்டன.

இவ்வாறு வௌவால் பறவைகளையும் விலங்குகளையும் ஏமாற்றி வாழத் தொடங்கியது. அதன் குட்டு ஒரு நாள் வெளிப்பட்டது. பாவம் வௌவால்! மற்றவர்களை ஏமாற்றியதால் மரக்கிளையில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

# 6

# மந்திர மழை



# மந்திர மழை



"என்ன? நினைத்ததும் மழை பெய்யுமா? தண்ணீர் உங்கள் பேச்சைக் கேட்குமா? நம்புவதற்குக் கடினமாக இருக்கிறது."

குழந்தைகள் அறிவழகியை ஐயத்தோடு பார்த்தார்கள்.

"நான் செய்யும் பரிசோனைகளைப் பாருங்கள். அப்புறம் சொல்லுங்கள்" என்றபடி அறிவழகி தன் அறையை நோக்கி நடந்தாள். குழந்தைகளும் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

"கவனமாக வாருங்கள், பொருள்கள் பத்திரம்" அறிவழகி எச்சரித்தாள். அவள் பரிசோதனைகள் செய்யத் தொடங்கினாள்.

குழந்தைகள் ஆர்வத்தோடு அவளைக் கவனித்தார்கள்.

"இதோ ஒரு வாளி நிறைய தண்ணீர் உள்ளது. இந்த நெகிழிக் குப்பியில் தண்ணீர் நிறைக்கப் போகிறேன்."


ஒரு நெகிழிக் குப்பியை எடுத்தாள். வாளிக்குள் குப்பி மூழ்கியிருக்கும்படி பிடித்தாள். குப்பியில் தண்ணீர் ஊற்றினாள். மூடியால் குப்பியை மூடினாள். அந்தக் குப்பியை மேலே தூக்கினாள். குழந்தைகள் ஆர்வத்தோடு குப்பியையே பார்த்தனர்.

"ஓ மழைக்கடவுளே, இப்போது மழை பெய்யட்டும்" என்று சொன்னாள்.

குப்பியின் மூடியை மெல்லத் திறந்தாள்.



என்ன ஆச்சரியம்! குப்பியின் அடிப்பகுதியிலிருந்து தண்ணீர் கொட்டியது. மழை பெய்வதுபோல் தண்ணீர் கொட்டியது.



“நீங்கள் மூடியைத் திறந்ததால் தான் மழை பெய்கிறது.”

மேரி தான் கவனித்ததைச் சொன்னாள்.

“ஆம். சரிதான். ஆனால்...

மூடியைத் திறக்கும்போது என்ன நடக்கிறது?”

அறிவழகி சிரித்தபடி கேட்டாள்.

அங்கு ஒரு நிமிடம் அமைதி நிலவியது.

“காற்று உள்ளே புகுகிறது. தண்ணீரைக் கீழ்நோக்கித் தள்ளுகிறது. சரியா அக்கா?” சௌமியா உரக்கக் கூறினாள்.

“பாராட்டுக்கள் சௌமியா. நீ ஊகித்தது முற்றிலும் சரி” அறிவழகி சொன்னாள்.

எல்லோரும் கரவொலி எழுப்பி சௌமியாவைப் பாராட்டினர்.

“அடுத்தது என்ன அக்கா?” குழந்தைகள் ஆர்வத்தோடு கேட்டனர்.



“என் பேச்சைத் தண்ணீர் கேட்கும்.

மூடியைத் திறக்காவிட்டாலும் மழை பெய்யும்”

அறிவழகி சிரித்தபடி கூறினாள்.

குழந்தைகளின் ஆர்வம் மேலும் கூடியது.

அவர்கள் நெகிழிக் குப்பியின் அடிப்பகுதியை உற்றுக் கவனித்தார்கள்.

“ஓ மழைக் கடவுளே,

மழை பெய்யட்டும்” என்றாள்.

உடனே குப்பியின் அடிப்பகுதியிலிருந்து மழை பெய்தது.

“எப்படி, அது எப்படி? அக்கா, மீண்டும் மழை பெய்ய வையுங்கள் பார்ப்போம்.”

குழந்தைகள் ஆர்வத்தோடு அறிவழகியின் பக்கத்துக்கு வந்தனர்.

அறிவழகி மீண்டும் மழை பெய்வித்தாள்.

“நான் கண்டுபிடித்துவிட்டேன். நீங்கள் குப்பியை அழுத்துகிறீர்கள்.

அப்படி அழுத்தும்போது மழை பெய்கிறது.”

“ஆகா அருமை. நன்றாகக் கவனித்தாய். அப்படி அழுத்தும்போது நடப்பது என்ன?” அறிவழகி கேட்டாள்.

“குப்பிக்குள் இருக்கும் காற்று தண்ணீரை கீழ்நோக்கித் தள்ளுகிறது” அகிலா சொன்னாள்.

“ஆகா அருமையாக யோசித்தாய்” அறிவழகி பாராட்டினாள்.

“அக்கா, நிறைய உறிஞ்சு குழல்கள் வைத்திருக்கிறீர்களே! எதற்கு?” குழந்தைகள் கேட்டனர்.

“இவை மந்திரக் குழாய்கள்.”

“மந்திரக் குழாய்களா? இவற்றைப் பயன்படுத்திப் பரிசோதனை செய்யுங்கள் அக்கா”

அறிவழகி குழந்தைகளின் பேச்சைத் தட்டவில்லை.

அடுத்த பரிசோதனைக்கு ஆயத்தமானாள்.



## சொல்லுங்கள்

- உங்களுக்குத் தெரிந்த அறிவியல் பரிசோதனைகள் என்னென்ன?
- இந்தப் பரிசோதனையை உங்களால் செய்து பார்க்க முடியுமா?
- உறிஞ்சுகுழல்களை வைத்து அறிவழகி செய்யப்போகும் பரிசோதனை என்னவாக இருக்கும்?
- அறிவழகியின் அறையில் வேறு என்னென்ன பொருள்கள் இருக்கும்?
- உங்கள் பேச்சைத் தண்ணீர் கேட்டால் தண்ணீரிடம் என்னென்ன சொல்வீர்கள்?

## கலந்துரையாடுங்கள்

- துவைத்த துணியைக் காயப்போடும்போது அதிலிருக்கும் தண்ணீர் எங்கே போகிறது?
- குளம் குட்டைகள் வற்றிப்போவதற்கான காரணங்கள் என்னென்ன?
- அவற்றிலுள்ள தண்ணீர் எங்கே போகிறது?
  - நீங்கள் நினைத்த பதில்கள் சரியான பதில்களா?
  - நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.
  - நண்பர்களுக்கும் சந்தேகம் வந்தால் ஆசிரியரிடம் கேளுங்கள்.

## செய்து பாருங்கள்

- கீழ்வரும் பரிசோதனையைச் செய்து பாருங்கள்.
  - ஒரு ஸ்டீல் டம்ளர் எடுங்கள்.
  - வெளிப்பகுதியை நன்கு துடைத்துச் சுத்தமாக்குங்கள்.
  - டம்ளருக்குள் ஒரு பனிக்கட்டியைப் போடுங்கள்.
  - பத்து நிமிடங்களுக்குப் பின் டம்ளரைப் பாருங்கள்.
- டம்ளரின் வெளிப்பகுதியில் நீங்கள் காண்பது என்ன?
- நீர்த்துளிகள் எங்கிருந்து வந்திருக்கும்?



## நினைத்தவுடன்...

- நினைத்தவுடன் வானத்திலிருந்து மழை பெய்தால் எப்படியிருக்கும்?
- எப்போதெல்லாம் மழை பெய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள்?
- எப்போது வேண்டாம் என்று நினைப்பீர்கள்?

## ஒன்றில் இரண்டு

அறிவழகி, கலையரசி, கண்மணி...

இந்தப் பெயர்களில் எல்லாம் இரண்டு சொற்கள் உள்ளன.

- அவை யாவை?
- இவைபோல் வேறு பெயர்கள் தெரியுமா? எழுதுங்கள்.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

## எப்படி? அது எப்படி?

- பாடல் வரிகளைத் தொடர்ந்து எழுதுங்கள்.

எப்படி? அது எப்படி?

மேகத்தில் தண்ணீர் வந்தது எப்படி?

எப்படி? அது எப்படி?

வானவில் வந்தது எப்படி?


..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

# ஆமையின் ஆகாயப் பயணம்



ஒரு குளத்தில் ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது. குளத்திற்கு வரும் இரண்டு கொக்குகள் அதன் நண்பர்கள். கோடைக்காலம் வந்தது. வெயில் கடுமையாக இருந்தது. குளத்திலுள்ள தண்ணீர் வற்றத்தொடங்கியது. 'தண்ணீர் முழுவதும் வற்றிவிட்டால் நான் எப்படி வாழ்வது?' ஆமை கவலைப்பட்டது. தன் கவலையைக் கொக்கு நண்பர்களிடம் கூறியது. கொக்குகள் ஆலோசித்தன.

கொக்குகள் ஒரு குச்சியை எடுத்தன. ஆளுக்கொரு முனையைக் கவ்விக் கொண்டன. "குச்சியைக் கடித்துக்கொள். உன்னை வேறொரு குளத்தில் விட்டு விடுகிறோம்." கொக்குகள் ஆமையிடம் கூறின.

"ஆனால் ஒரு நிபந்தனை. நாங்கள் உயரப் பறக்கும்போது நீ ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது."


கொக்குகள் நிபந்தனை விதித்தன. ஆமை சம்மதித்தது.



ஆமையைச் சுமந்துகொண்டு கொக்குகள் பறந்தன. நீருள்ள குளத்தைத் தேடின. கிராமம் நகரம் என எங்கும் தேடின. ஆமையைச் சுமந்துகொண்டு பறக்கும் கொக்குகளை மக்கள் பார்த்தனர். கூச்சலிட்டனர். அதைக் கேட்ட ஆமை பயந்தது. "ஏன் கூச்சலிடு கிறார்கள்?'' ஆமை கேட் கத்தொடங்கியது.



அடுத்த வினாடி.....?



# முகிலே முகிலே கருமுகிலே...



முகிலே முகிலே கருமுகிலே
மழையாய்ப் பொழிவது எப்போது?


குளிர்ந்த காற்று படும்போது
மரங்களின் குளிர்ச்சி படும்போது
மழையாய் நானும் பொழிந்திடுவேன்.
மண்ணில் நானும் விழுந்திடுவேன்.

ஆறு, அருவி, ஏரி, குளம் என
வேறு பெயர்கள் ஏன் உனக்கு?

மலையிலிருந்து விழும்போது
அருவி என்ற பெயர் பெறுவேன்.
மண்ணை அறுத்துச் செல்வதனால்
ஆறு என்று பெயர் பெறுவேன்.

மண்ணுக்குள்ளே சென்றொரு நாள்
ஊற்று நீராய் வெளிவருவேன்.
பள்ளம் பார்த்துத் தேங்குவதால்
குளமாய் நானும் அறிகின்றேன்.

ஆறுகள் அனைத்தும் சேருமிடம்
அதுவே கடலென அறிவாயே!
இத்தனை பெயர்கள் இருந்தாலும்
எல்லாம் தண்ணீர் மயம்தானே !



## சொல்லுங்கள்

- பாடலில் தண்ணீரோடு தொடர்புடைய எத்தனை பெயர்கள் வந்துள்ளன?
- எல்லாம் தண்ணீர் மயம்தானே என்ற வரியின் பொருள் என்ன?
- நீங்கள் மேகத்திடம் என்னென்ன கேள்விகள் கேட்பீர்கள்?
- மழை எவ்வாறு உருவாகிறது?
- மழை நீர் எங்கெல்லாம் செல்கிறது?

## எத்தனை கேள்விகள்?

ஆறுகள் சேரும் இடத்தின் பெயர் என்ன?

அருவி என்று பெயர் பெறுவது எப்போது?

- இவைபோன்று மேலும் வினாக்கள் உருவாக்குங்கள்.

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

## சொல்லிப் பாருங்கள்

- வடலி இளம் வடலி

  வடலிக்கு ஊடே போகும்

  கரடி இளம் கரடி

- குளத்தில் ஒரு குளவி வழுக்கி விழுந்து உருளுது புரளுது - நீரில் தத்தளித்துத் தள்ளாடுது.

- கண்ணய்யா கண்ணய்யா கன்னத்தில் என்னய்யா?

  பொன்னய்யா பொன்னய்யா கிண்ணத்தில் உள்ளதைத் தின்னய்யா.

## வேறு பெயர் தெரியுமா?

- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் பொருள் தரும் வேறு சொற்களை எழுத முடியுமா?

  - மேகம் ________
  - வானம் ________
  - சூரியன் ________
  - நிலா ________
  - கடல் ________

## சொல்லுங்கள்

- உங்கள் ஊரில் ஆறோ குளமோ உண்டா?
- அவற்றில் எந்தெந்த மாதங்களில் தண்ணீர் நிறைந்திருக்கும்?
- அவற்றில் எந்தெந்த மாதங்களில் தண்ணீர் வற்றியிருக்கும்?



# வாழ்வுக்கு வளம்

“அக்கா... அறிவழகி அக்கா...”

குழந்தைகள் அழைத்தனர்.

அறிவழகி வெளியே வந்தாள்.

“ஊரெங்கும் வறட்சி என்பது உங்களுக்குத் தெரியாதா?” ஆகாஷ் கேட்டான்.

“நீங்கள் நினைத்தால் மழை பெய்யுமே. எங்கே மழை பெய்யச் செய்யுங்கள் பார்ப்போம்!” சௌமியா கேட்டாள்.

‘‘உங்களால் முடியாது என்று எங்களுக்குத் தெரியுமே!” குழந்தைகள் சிரித்தனர்.

“நான் சொல்வதை நீங்கள் கேட்டால் மழை பெய்யும்”

அறிவழகி யோசனையோடு சொன்னாள்.

“என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்” குழந்தைகள் உற்சாகத்தோடு கேட்டனர்.

“நம் ஊர்க்குளம் எப்படி இருக்கிறது தெரியுமா?” அறிவழகி கேட்டாள்.

“ஐயோ, அதன் பக்கமே போக முடியாதே!”

குழந்தைகள் மூக்கைப் பொத்தியபடி கூறினர்.

“அதைச் சுத்தம் செய்யலாமா?” அறிவழகி கேட்டாள்.

“நாங்கள் குழந்தைகள் அல்லவா?”

“ஊராரின் உதவியை நாடுவோம்”

“எப்படி?”

விழிப்புணர்வு ஊர்வலம் போவோம்.

“சரியான திட்டம்”

அடுத்த நாள்

ஊர்வலம் நடந்தது.



## சொல்லுங்கள்

- ஊர்க்குளம் எப்படியெல்லாம் மாசுபட்டிருக்கும்?
- உங்கள் ஊரில் குளம் உண்டா?
- அதன் நிலைமை என்ன?
- பாடப்பகுதியிலுள்ள முத்திரை வாக்கியங்களில் பிடித்தது எது? ஏன்?

## வேறுபாடு

| மழைக்காலம் | வறட்சிக் காலம் |
|---|---|
| குளம் குட்டை நிறைந்திருக்கும். | குளம் குட்டை வற்றி வறண்டிருக்கும். |

## விழிப்புணர்வு

- குளத்தை மாசுபடுத்தக் கூடாது என்பதைப் பற்றி விழிப்புணர்வு வேண்டும்.
- பொது இடங்களை அசுத்தம் செய்யக் கூடாது என்பது பற்றி விழிப்புணர்வு வேண்டும்.

- இதுபோல் மக்களுக்கு வேறு எதைப்பற்றியெல்லாம் விழிப்புணர்வு அளிக்க வேண்டும்?
- ........................................................................................................
- ........................................................................................................

## வேறு முத்திரை வாக்கியங்கள்

பொதுஇடத்தை மாசுபடுத்துவது பற்றிய விழிப்புணர்வு நடக்கிறது.

குழந்தைகள் ஊர்வலமாகச் செல்கிறார்கள். அவர்கள் கையில் முத்திரை வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டைகள்.

- அவற்றில் என்னென்ன எழுதப்பட்டுள்ளன?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

- வேறு என்னென்ன முத்திரை வாக்கியங்கள் எழுதலாம்?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

## கவலை வேண்டாம்

- ஊரெங்கும் வறட்சியா? கவலை வேண்டாம் நான் நினைத்ததும் மழை பெய்யும்.
- ஊரெங்கும் வெள்ளமா? கவலை வேண்டாம் நான் நினைத்ததும் தண்ணீர் வற்றிவிடும்.

- இதுபோல் எத்தனை வாக்கியங்கள் உருவாக்குவீர்கள்?



# குளம், நம் வாழ்வுக்கு வளம்

சுத்தமான குளம்.

குப்பைகள் இல்லா வாய்க்கால்

அவை மழைக்காகக் காத்திருந்தன.

ஒரு நாள்...

மேகம் கறுத்தது. மின்னல் மின்னியது.

இடி இடித்தது. ‘சோ’ வென மழை கொட்டியது.

வானம் பொத்துக்கொண்டு பொழிந்தது.

வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்தது.


குளத்தை நோக்கிப் பாய்ந்தது.

குளம் நிரம்பத் தொடங்கியது.

சில நாட்களில் குளம் நிரம்பியது.

பார்க்கப் பார்க்கத் தண்ணீர் தெளிந்தது.

குளத்தில் தாமரை ஒன்று எட்டிப் பார்த்தது.



இதழை விரித்துச் சிரித்தது.

அதை ஒரு தவளை பார்த்தது. குளத்திற்குள் குதித்தது.

குளம் சிரித்தது.

சிற்றலைகள் “தளுக் தளுக்” என்று கரையைத் தட்டின.

தவளை நீந்திச் சென்றது.

தாமரைப்பூ மேல் அமர்ந்தது.

பெருமையோடு நாற்புறமும் பார்த்தது.

பூவில் தவளை அமர்ந்ததை வண்டு பார்த்தது.

பூவை நோக்கிப் பாடி வந்தது. பூவை வட்டமிட்டது.

பாட்டுக்கு ஏற்ப தாமரைப் பூ தலையாட்டியது. ரசித்தது.

தவளை பூவிலிருந்து வெளியே தாவியது.


இந்த நிகழ்ச்சியைப் பார்த்து அங்கே வந்தது குளக்கோழி.

நீரைக் கிழித்துக்கொண்டு வந்தது.

நீரில் மூழ்கி... எழுந்து... மூழ்கி... எழுந்து... வந்தது.

தாமரையின் அருகே வந்தது.






நீர்ப்பாம்பு குளக்கோழியைப் பார்த்தது. பொந்திலிருந்து வெளியே வந்தது. நீரில் கோலம் போட்டது. குளக்கோழியும் தவளையும் பாம்பைக் கண்டன. ஒரே தாவலில் அங்கிருந்து வெளியேறின.

பாம்பு வெளியே போய்விட்டதை நண்டுகள் கண்டுகொண்டன. குளக்கரையில் உள்ள பொந்துகளிலிருந்து தலையை நீட்டிப் பார்த்தன. நாங்கள் சும்மா இருப்போமா என்பது போல் மீன்களும் துள்ளின. மின்னல் போல் துள்ளின.

குளக்கரையில் ஒரு மரம். மரக்கிளையில் ஒரு மரங்கொத்தி. அது குளத்தையே பார்த்துக்கொண்டிருந்தது. மீன்கள் துள்ளுவதைப் பார்த்து மகிழ்ந்தது. சட்டென அம்பு போல் பாய்ந்தது. நீரில் மூழ்கி எழுந்தது. அதன் அலகில் ஒரு மீன்.



கொக்கு ஒன்று வந்தது. ஒற்றைக் காலில் நின்றது. அது சிலை போல் இருந்தது. பெரிய மீன் வருவதற்காகக் காத்திருந்தது.

குளம் எத்தனை பேருக்கு வீடாக இருக்கிறது! அந்த வீட்டைக் காப்போம். மாசுபடாமல் காப்போம்.

## சொல்லுங்கள்

- பாடப்பகுதியில் உங்களுக்குப் பிடித்த காட்சி எது? ஏன்?
- பாடப்பகுதியில் எத்தனை உயிரினங்களின் பெயர்கள் வந்துள்ளன?
- தவளை பயந்தது எப்போது?
- கொக்கு ஒற்றைக் காலில் நின்றது ஏன்?
- நீரில் கோலம்போட்டது யார்?

## அழகான காட்சி

"குப்பைகள் இல்லா வாய்க்கால்

மாசுபடாத குளம்

சுத்தமான பேருந்து நிலையம்

ஆகா நினைக்கவே நன்றாக இருக்கிறது."

- இதுபோல் வேறு என்னென்ன காட்சிகள் காண வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? எழுதுங்கள்.

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

## அதுபோல இதுபோல

அம்பு போலப் பாய்ந்தது - ..........................................................

சிலை போல நின்றது - ..........................................................

முத்து போல இருப்பது - ..........................................................

பட்டு போல இருப்பது - ..........................................................

## ஒன்றிலிருந்து மற்றொன்று

குளக்கரையில் ஒரு மரம்.

மரக்கிளையில் ஒரு பழம்.

பழத்தைத் தேடி வந்தது பறவை.

பறவைக்கு நல்ல பசி.

பசியெடுத்த பறவை பழத்தைத் தின்றது.

தின்று தின்று வயிறு நிறைந்தது.

வயிறு நிறைந்த பறவை 'கீ கீ' எனக் கத்தியது.

மேலே உள்ள வாக்கியங்களை வாசியுங்கள். முதல் வாக்கியத்தின் இறுதிச் சொல் அடுத்த வாக்கியத்தின் முதல் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- இப்படி உங்களால் எத்தனை வாக்கியங்கள் சொல்ல முடியும்?

## மாசடையாமல் இருக்க

- உன் வீட்டிலுள்ள கிணறு / குடிநீர் குழாயடி என்னென்ன முறையில் மாசடைகிறது?

- அவ்வாறு மாசுபடாமல் இருக்க நீங்கள் என்னென்ன செய்வீர்கள்?

## எத்தனை வாக்கியங்கள்?

**கொக்கு- கோழி**

- கொக்கும் கோழியும் நண்பர்கள்.
- கொக்கும் கோழியும் குளக்கரையில் நின்றன.
- கொக்கும் கோழியும் பறந்தன.

இதுபோல் எத்தனை வாக்கியங்களை ஐந்து நிமிடத்திற்குள் உங்களால் எழுத முடியும்?

## பிராணிகளைக் கண்டுபிடியுங்கள்

கட்டங்களில் ஒளிந்துள்ள பிராணிகளைக் கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க | கு | ரு | வி | ரு | த | து | ம் | பி |
| மு | உ | ஈ | தி | மி | ங் | க | ல | ம் |
| தை | மா | த | ம் | கி | ளி | பூ | கொ | சு |
| ப | டு | டி | ஆ | டு | யா | னை | எ | லி |
| ரு | எ | ரு | மை | ஒ | ட் | ட | க | ம் |
| ந் | தே | எ | னா | ரு | மு | த | லை | ப |
| து | மீ | ன் | ஐ | வ | று | வ | ல் | கு |
| ணி | சை | ன | யா | ன் | க் | ளை | ப | தி |
| கா | க் | கா | ட் | டெ | ரு | மை | இ | ரை |

## கண்டுபிடியுங்கள்

- கீழ்க்காணும் பொருள்களுள் எவையெவை நீரில் மூழ்கும்?
- எவையெவை மிதக்கும்?

கல், மரத்துண்டு, ஆணி, தக்காளி, வெண்டைக்காய், இரப்பர், முட்டை, பந்து,.....

| மூழ்குபவை | மிதப்பவை |
| --- | --- |
| | |

### செய்து பாருங்கள்

- ஒரு கண்ணாடித் தம்ளரை எடுங்கள்.
- அதன் வாய்வரை நீர் நிரப்புங்கள்.
- மேசை மேல் வையுங்கள்.
- குண்டூசிகளை ஒவ்வொன்றாக இடுங்கள்.

- தண்ணீர் வழியாமல் எத்தனைக் குண்டூசிகளை உங்களால் போட முடியும்?

## எத்தனை வாக்கியங்கள்?

**தண்ணீர் - மழை - குளம்**

- இம் மூன்று சொற்களும் இடம் பெறும்படி உங்களால் ஐந்து நிமிடத்திற்குள் எத்தனை வாக்கியங்கள் எழுத முடியும்?
  - மழை பெய்ததால் குளமெல்லாம் தண்ணீர் நிறைந்திருக்கிறது.
  - ..............................................................................................................
  - ..............................................................................................................

# 7

# பசித்துப் புசி



# ருசியை மட்டும் பார்க்காதே!



“மதியழகா சாப்பிட வா..” அன்பாய் அழைத்தார் அம்மா.

மகனோ...

*“வெண்டைக்காய்ப் பொரியலா?*
*வேண்டவே வேண்டாம்.*
*கொத்தவரங்காய்ப் பொரியலா?*
*தொடவே மாட்டேன்..*
*கோசுப் பொரியலா?*
*குப்பையில் கொட்டு.*
*கீரைக் குழம்பா?*
*கோழிக்குப் போடு.*
*கத்திரிக்காய்க் குழம்பா?*
*வேண்டவே வேண்டாம்.”*



என்று பாட்டுப் பாடினான். பலதையும் ஒதுக்கினான்.

“இது கண்ணுக்கு நல்லது. இது எலும்பு வளர்ச்சிக்கு ஏற்றது. இது ஜீரண சக்தியைக் கூட்டும். இது உடல் வளர்ச்சிக்கு உகந்தது.” என்று பார்த்துப் பார்த்து அம்மா சமைப்பார். சாப்பிடச் சொல்லிக் கெஞ்சுவார். சில சமயம் மிரட்டக் கூடச் செய்வார்.

ஆனால் மதியழகனோ எதற்கும் மசிய மாட்டான். கோழி கொத்துவது போல் கொத்திவிட்டு,

“ எனக்குப் பசியில்லைம்மா... போதும்மா...” என்று ஓடி விடுவான்.

“ நிறுத்தி நிதானமா சாப்பிடு கண்ணா..” என்று கொஞ்சினாலும் கேட்க மாட்டான். ஆனால் துரித உணவுகளை விரும்பிச் சாப்பிடுவான். அதையும் கூட அவசர அவசரமாக மென்று விழுங்குவான்.

நாட்கள் சென்றன. ஓடியாடிச் சுறுசுறுப்பாக இருந்தவன் சோர்ந்து சோர்ந்து அமரத் தொடங்கினான். ஒரு நாள் அதுவும் முடியாமல் படுத்துவிட்டான்.

“ ஐயோ... வயிற்றுவலி தாங்க முடியவில்லையே!” என்று அலறினான். தரையில் கிடந்து உருண்டான்.

“ஐயோ..! ஐயோ..!” அம்மாவும் அப்பாவும் ஓடி வந்தனர். தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினர். மருத்துவர் வந்தார். பரிசோதித்தார். தேவையான மருந்துகள் கொடுத்தார். மதியழகன் தேறினான். மருத்துவர் மீண்டும் வந்தார். அறிவுரை கூறத் தொடங்கினார்.

*ருசியை மட்டும் பார்க்காதே! – நாவின்*

*ருசியை மட்டும் பார்க்காதே!*

*வாரி வழித்துத் தின்னாதே! –சும்மா*

*வாரி வழித்துத் தின்னாதே!*

*கையை நன்கு கழுவாமல் – கண்ணில்*

*கண்டதை எல்லாம் தின்னாதே!*



*பசித்த பின்பு சாப்பிடு! - மெல்ல*

*மென்று சுவைத்துச் சாப்பிடு!*

*காய்கறி வகையைச் சேர்த்திடு! - நோயைத்*

*தூர நீயும் துரத்திடு!*


*ஓடி ஆடி விளையாடு! - உன்*

*உடலை உறுதி செய்திடு!*

*இரவில் நன்கு உறங்கிடு - சீராய்*

*வாழும் வழியிது தெரிந்திடு!*

மதியழகன் மருத்துவர் சொன்னதைக் கேட்டான். அதன்படி உண்ணத் தொடங்கினான். நீங்களோ...!?



## சொல்லுங்கள்

- உங்களுக்குப் பிடித்தக் காய்கறிகள் எவை?
- பிடிக்காத காய்கறிகள் எவை? ஏன்?
- பாடப்பகுதியில் எத்தனைக் காய்கறிகள் வந்துள்ளன?
- ருசியை மட்டும் பார்த்தால் போதுமா?
- ஒரே வகையான உணவை தொடர்ந்து உண்டால் என்ன ஆகும்?

## பாடுங்கள்

- பாடப்பகுதியிலுள்ள பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- எத்தனை வரிகளை உங்களால் பாராமல் பாடமுடியும்?

## என்னென்ன செய்யணும்?

| உண்ணும் முன் | உண்ணும் போது | உண்ட பின் |
|---|---|---|
| | | |

## விடை என்ன?

- பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துகள். ______
- குண்டுப் பையனுக்கு உடம்பெல்லாம் தோல். ______
- மண்ணிலிருக்கும் மாயாண்டி உரிக்க உரிக்க தோலாண்டி. ______
- ஒற்றைக்கால் குள்ளனுக்கு வயிறு நிறைய பற்கள். ______
- கீழே கொடுக்கப்பட்டுள்ளவை விடையாக வரும்படி விடுகதைகள் எழுதுங்கள்.





## எழுதுங்கள்

- பாடப்பகுதியில் வராத எத்தனை காய்கறிகளின் பெயர்களை உங்களால் எழுத முடியும்?

| பச்சையாகச் சாப்பிடுபவை | வேகவைத்துச் சாப்பிடுபவை |
| --- | --- |
| | |

- பச்சையாகச் சாப்பிடுபவை அதிகமா?
- வேகவைத்துச் சாப்பிடுபவை அதிகமா?

## விசாரியுங்கள்

- சாம்பாரில் என்னென்ன காய்கறிகளைப் பயன்படுத்துவார்கள்?
- சாம்பார் வைக்கப் பயன்படாத காய்கறிகள் உள்ளனவா? அவை எவை?

## கண்டுபிடியுங்கள்

- வெண்டைக்காய் - இதில் ஒளிந்துள்ள பறவை எது?

காடை

- முருங்கைக்கீரை - இதில் ஒளிந்துள்ள உடலுறுப்பு எது?

- அகத்திக்கீரை - இதில் ஒளிந்துள்ள உபகரணம் எது?

- நெல்லிக்காய் - இதில் ஒளிந்துள்ள தானியம் எது?

- உருளைக்கிழங்கு - இதில் மரத்தின் ஒரு பாகம் ஒளிந்துள்ளது. அது எது?

## பாடி மகிழ

பெரிய பெரிய கடையிலே
வடையும் முறுக்கும் சுடையிலே
நானும் போனேன் இடையிலே
அள்ளி வைச்சேன் மடியிலே
தின்று விட்டேன் நொடியிலே
ருசியை மறக்க முடியலே
எனக்கு வேண்டும் நிறையவே
அதுக்கு என்ன செய்யணும்?

# விலையில்லாச் சாப்பாடு

மதியழகன் மாறவேயில்லை.

"உணவை வீணாக்கக் கூடாது மகனே" அம்மா சொன்னார். அவன் காதில் விழவேயில்லை.

"உணவை வீணாக்கக் கூடாது மகனே" என்று அப்பா சொன்னார். அதை அவன் கவனிக்கவேயில்லை.

"ம்... போதும் போதும். வயிறு நிறைந்துவிட்டது" என்று எழுந்திருப்பான். தட்டில் பாதி சாப்பாடு இருக்கும்.

"நான் எத்தனை சிரமப்பட்டுச் சமைக்கிறேன். இவன் இப்படி வீணாக்குகிறானே" அம்மா கவலைப்பட்டாள்.

''எவ்வளவு பணம் கொடுத்து வாங்கியது. இப்படி வீணாக்கலாமா?" அப்பா வருத்தப்பட்டார்.




'மகனை எப்படித் திருத்துவது?' மதியழகனின் அப்பா கவலைப்பட்டார். அவனைத் திருத்தும் வழிபற்றி ஆலோசித்தார். அவர் மனதில் ஒரு திட்டம் தோன்றியது.

ஒரு நாள்...

''அம்மா... அம்மா.. பசிக்குது. சாப்பாடு போடுங்கள்'' மதியழகன் கைகழுவிக் கொண்டே உரத்த குரலில் கூவினான்.

அப்பா சமையலறையில் பாத்திரங்கள் கழுவிக்கொண்டிருந்தார்.

“மதியழகா… அம்மா வெளியே வேலைக்குப் போயிருக்கிறார்கள். நான் இப்போதுதான் வந்தேன். இனிமேல்தான் சமைக்கவேண்டும். கொஞ்சம் பொறு” அப்பா கூறினார்.

‘ஐயய்யோ பசி! உயிர் போகுதே!” மதியழகன் கூறினான்.

அரை மணி நேரமாயிற்று, ஒரு மணிநேரமாயிற்று… அப்பா சமையல் வேலையைத் தொடங்கவில்லை. பாத்திரம் ஒன்றை எடுப்பார். அதற்குள் தொலை பேசியில் யாராவது அழைப்பார்கள். பேசத் தொடங்கிவிடுவார்.

“அப்பா, சீக்கிரம் அப்பா… பசி உயிர் போகுது…” மதியழகன் வயிற்றைப் பிடித்துக்கொண்டே கேட்டான்.

“கொஞ்சம் பொறு… இன்னும் ஒரு மணிநேரமாகும்” அப்பா அமைதியாகச் சொன்னார்.

“என்ன ஒரு மணி நேரமா?” அவனுக்கு அழுகையே வந்தது. முதல் முறையாக, பசித்தால் எப்படியிருக்கும் என்று மதியழகனுக்குப் புரிந்தது.

“அப்படியானால் உணவகத்திற்குப் போகலாம் அப்பா?“ அவன் கெஞ்சினான்.



“ஒருவேளை சாப்பாடு தாமதமானதற்கே இப்படியா? சரி சரி.. வா வா..” அவர் முகத்தில் புன்சிரிப்பு தோன்றியது.

இருவரும் உணவகத்திற்குள் நுழைந்தனர். சாப்பிட்டனர். இம்முறை மதியழகன் ஒரு பருக்கைச் சோற்றைக்கூட வீணாக்கவில்லை. ருசித்துச் சாப்பிட்டான். ரசித்துச் சாப்பிட்டான்.‘ ’‘பசித்தபின் புசி’’ என்பது எவ்வளவு சரி! ’அப்பா நினைத்துக்கொண்டார்.

உணவகத்தை விட்டு வெளியே வரும்போது அப்பா இரண்டு உணவுப் பொட்டலங்கள் வாங்கினார்.



“எதுக்கப்பா உணவுப் பொட்டலம்?
அம்மாவுக்கா?”

“என்னுடன் வா புரியும்”

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

ஆலமரத்தடியில் ஓர் அம்மாவும்
இரண்டு குழந்தைகளும்... எண்ணெய் காணாத தலை,
குழிவிழுந்த கண்கள், ஒட்டிய வயிறு.
அவர்களைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

‘‘இந்தாங்கம்மா, சாப்பிடுங்க’’ உணவுப்பொட்டலத்தை நீட்டிக்கொண்டே சொன்னார் மதியழகனின் அப்பா. அந்தத் தாய் எதுவுமே பேசாமல் வாங்கிக்கொண்டாள். அவள் கண்கள் நன்றியோடு அவரைப் பார்த்தன.

குழந்தைகள் பொட்டலத்தைப் பிரித்து வாரி வாரித் தின்னத் தொடங்கின. அவர்கள் நிற்பதையும் மறந்து சாப்பிடத் தொடங்கின. பல நாள் சாப்பிடாமல் இருந்துவிட்டு சாப்பிடுவது போல் இருந்தது. மதியழகன் அக்குழந்தைகளையே பார்த்தான்.

‘ஒரு வேளை சாப்பிடாமல் இருந்த எனக்கே இப்படி இருக்கிறது. பல நாள் சாப்பிடாத அவர்களுக்கு எப்படி இருக்கும்?’ அவன் நினைத்தான்.

அன்றிலிருந்து அவன் உணவுப்பொருளை வீணாக்கியதே இல்லை. பாத்திரத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து அவனே தட்டில் போடுவான். சாப்பிடுவான். ஆம். உணவின் அருமை பசித்தால் தெரியும்.

## சொல்லுங்கள்

- இக்கதையில் உங்களுக்குப் பிடித்த நிகழ்வு எது? ஏன்?
- நீங்கள் உணவை வீணாக்குவது உண்டா?
- நீங்கள் உணவகத்திற்குச் சென்று உணவு சாப்பிடுவதுண்டா?
- உங்களைச் சுற்றி யாராவது பசியால் வாடுபவர்கள் உள்ளனரா?
- அவர்களது பசியைப்போக்க, நீங்கள் ஏதாவது செய்ததுண்டா?

## கேள்வியும் பதிலும்

- மாதிரியைப் போன்று எழுதுங்கள்.

மாதிரி :

உனக்கு என்ன வேண்டும்?

எனக்கு மாம்பழம் வேண்டும்.

- ..............................................................................................

அதை நன்கு கழுவுவேன்.

- ..............................................................................................

அதைத் துண்டு துண்டாக நறுக்குவேன்.

- துண்டு துண்டாக நறுக்கிய பின் என்ன செய்வாய்?

..............................................................................................

- ..............................................................................................

..............................................................................................

- ..............................................................................................

..............................................................................................

## வரிசைப்படுத்துங்கள்

கதை நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

## எழுதுங்கள்

மதியழகன் இனி என்ன செய்வான்?

## அது என்ன?

கீழ்க்காணும் குறிப்புகளை வாசித்துச் சரியான விடைகளைக் கண்டுபிடியுங்கள்.

பூட்டில் உண்டு. புட்டில் இல்லை.
உரியில் உண்டு. உடையில் இல்லை.

அது என்ன?

தோப்பில் உண்டு. தொப்பியில் இல்லை.
தசையில் உண்டு. தரையில் இல்லை.

அது என்ன?

# மதியழகனின் நாட்குறிப்பு

28.01.2015

இன்று இரண்டு நிகழ்ச்சிகள் நடந்தன. அவை என் மனதைக் குடைந்தன. ஒன்று காலையிலிருந்தே எனக்கு வயிற்று வலி. தாங்கமுடியாமல் தவித்தேன். காய்கறிகள் சாப்பிடு, கண்ட கண்ட நேரத்தில் சாப்பிடாதே, ஈ மொய்த்த பண்டங்களைச் சாப்பிடாதே என்று அம்மா எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார். ஆனால் அதை இதுவரை நான் பின்பற்றியதில்லை. அதன் பலனை இன்று அனுபவித்தேன். வயிற்றுவலியால் துடித்தேன். எனக்குப் புத்தி வந்தது. இனிமேல் தாய் சொல்லைத் தட்டக் கூடாது என்று தீர்மானித்தேன். மருத்துவர் கூறியதும், என் மாற்றத்திற்குக் காரணமானது. முறையான உணவுப் பழக்கங்களைப் பின்பற்ற வேண்டுமென்று முடிவு செய்தேன்.

இரண்டு, அப்பா சொன்ன வார்த்தைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்தன. ஒருவேளை உணவுகூடக் கிடைக்காமல் பாவம் எத்தனையோ பேர்! ஆனால் நாம் எவ்வளவு உணவை வீணாக்குகிறோம் என்று அப்பா பலமுறை கூறியுள்ளார். பசியால் வாடிய தாயையும் இரண்டுக் குழந்தைகளையும் பார்க்கவே பரிதாபமாய் இருந்தது. என் மனம் வருந்தியது. இனிமேல் உணவை வீணாக்கக்கூடாது. மட்டுமல்ல, உணவின்றி வாடுபவருக்கு உதவ வேண்டும் என்றும் முடிவு செய்தேன். என் மனதை மாற்றிய இந்த நாள் என் வாழ்வில் என்றுமே இனியநாள்.

## சொல்லுங்கள்

- நீங்கள் நாட்குறிப்பு எழுதுவதுண்டா?
- மதியழகனின் நாட்குறிப்பில் உள்ள இரண்டு முக்கியமான நிகழ்வுகள் எவை?
- அவற்றின் மூலம் மதியழகன் என்னென்ன பாடங்களைக் கற்றுக்கொண்டான்?

## எழுதுங்கள்

- இன்று நாட்குறிப்பு எழுதினால், உங்களது நாட்குறிப்பில் என்னென்ன நிகழ்வுகளை எழுதுவீர்கள்?
- என்னென்ன பாடங்களைக் குறிப்பிடுவீர்கள்?
- என்னென்ன தீர்மானங்களை எழுதுவீர்கள்?

## எழுதுங்கள்

"மதியழகன் முறையான உணவுப் பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும் என முடிவு செய்தான்."

- மதியழகன் என்னென்ன உணவுப் பழக்கங்களைப் பின்பற்ற முடிவு செய்திருப்பான்?
  - எல்லாக் காய்கறிகளும் சாப்பிட
  - சாப்பிடும் முன் கை கழுவ.
  -
  -
  -
  -

## திருத்தி எழுதுங்கள்

- காய்கரிகல்
- உனவு
- அளகான மயிள்
- வாலைப்பளம்


## முடிவு என்ன?

"இன்று நேரில் கண்ட அனுபவம்... பசியால் வாடிய தாயையும் இரண்டு குழந்தைகளையும் பார்க்கவே பரிதாபமாய் இருந்தது. என் மனம் வருந்தியது. இனிமேல் உணவை வீணாக்கக்கூடாது. மட்டுமல்ல, உணவின்றி வாடுபவருக்கு உதவ வேண்டும் என்றும் முடிவு செய்தேன்."

- இது மதியழகனின் அனுபவம். இது போல் நீங்கள் பார்த்ததில் உங்கள் மனதைத் தொட்ட நிகழ்ச்சி எது?

- அதன் அடிப்படையில் நீங்கள் எடுத்த முடிவு என்ன?

# ஆகா! என்ன சுவை!



மதியழகன் இப்பொழுது நல்ல பையன். அம்மா தரும் உணவைத் தட்டாமல் சாப்பிடுவான். உணவு சமைக்க அம்மாவிற்கு உதவியும் செய்வான். இன்று அவனது வீட்டிற்குத் திடீரென சில உறவினர்கள் வந்துவிட்டனர். அம்மா அவர்களுக்காக அவசர அவசரமாக உணவு தயாரிக்கத் தொடங்கினார்.

அம்மா : தக்காளி இரண்டை எடுத்திடு.

துண்டு துண்டாய் வெட்டிடு.

மதியழகன் : அப்புறம்?

அம்மா : காரட் இரண்டை எடுத்திடு.

அதையும் நறுக்கி வைத்திடு.

மதியழகன் : அவ்வளவுதானா?

அம்மா : பெரிய வெங்காயம் ஒன்றை எடுத்திடு.

தோலை நன்றாய் உரித்திடு.



மதியழகன் : கண் எரியுமே?

அம்மா : பச்சை மிளகாய் இரண்டை எடுத்திடு.

துண்டு துண்டாய் நறுக்கிடு.

மதியழகன் : அடுத்து?

அம்மா : இஞ்சி கொஞ்சம் நறுக்கிடு.

மல்லி இலையைக் கிள்ளிடு.

மோரைக் கொஞ்சம் ஊற்றிடு.

உப்பைக் கொஞ்சம் தூவிடு.

மதியழகன் : சொன்னது போல் செய்துவிட்டேன்.

அம்மா : நன்றாய் அதனைக் கலக்கிடு.

ருசித்து நீயும் பார்த்திடு!

மதியழகன் : ஆகா! என்ன சுவை!





## சொல்லுங்கள்

- மதியழகனும் அம்மாவும் செய்த உணவின் பெயர் என்ன?
- இதுபோல் உனக்கு என்னென்ன உணவுகள் சமைக்கத் தெரியும்?
- சமையல் வேலையில் உதவி செய்வதுண்டா?
- என்னென்ன உதவிகள் செய்வாய்?

## சமையல் குறிப்பு

- செய்யும் முறையை எழுதுங்கள்.


**தேவையான பொருள்கள் :**

பால், சர்க்கரை, தேயிலைத்தூள்

**செய்யும் முறை :**

## என் சமையல்

உங்களுக்கு என்ன சமைக்கத் தெரியும்? எப்படி சமைப்பீர்கள்? எழுதுங்கள்.




# தக்காளி, வெங்காயம், குச்சி ஐஸ்...

தக்காளி, வெங்காயம், குச்சி ஐஸ் இவங்க மூணு பேரும் நெருங்கிய நண்பர்கள்.

பூசணிக்காயை வெங்காயம் "பூசணி மாமா பூசணி மாமா" ண்ணுதான் கூப்பிடும். ஒருநாள் வெங்காயம் தன்னோட நண்பர்கள் கிட்ட "எனக்குப் பூசணிமாமாவைப் பாக்கணும்ணு தோணுது. நான் நாளைக்குப் புறப்படலாம்ணு இருக்கேன்" அப்படீண்ணு சொல்லிச்சு.

"அப்படியா, நாங்களும் வர்றோம். நாம மூணுபேரும் சேர்ந்தே போவோம்" அப்படீண்ணு சொல்லிச்சு குச்சி ஐஸ்.

அடுத்தநாள் மூணுபேரும் பயணத்துக்குப் புறப்பட்டாங்க. மொதல்ல நடக்கும்போது நல்ல சுகமாத்தான் இருந்திச்சு. ஆனால் கொஞ்ச நேரமானதும் கால் வலிக்கத் தொடங்கிச்சு. ஒடம்பு வேர்த்திச்சு. எங்காயாவது கொஞ்சம் ஓய்வு எடுத்தாப் பரவாயில்லைணு மூணு பேருக்கும் தோணிச்சு.

"இத பாருங்க, அந்தப் பக்கமாக குளிர்ந்த காற்று வீசுது. அங்கு குளம் இருக்கலாம்ணு நெனக்கிறேன். வாங்கண்ணு" தக்காளி கூப்பிட்டுச்சு.

கொஞ்ச தூரந்தான் நடத்திருப்பாங்க. அதுக்குள்ள ஒரு குளம் தெரிஞ்சுச்சு. மூணுபேரும் ஓடிப்போய் குளக்கரையிலிருந்த மரநிழல்ல உக்காந்தாங்க.

'இந்தக் குளத்திலெ குளிச்சா இருக்கிற கொஞ்ச நஞ்ச களைப்பும் ஓடிப்போயிடும், குளிக்கலாமாண்ணு தக்காளி கேட்டுச்சு.

"ஆகா... நல்லாச் சொன்னே. குளிக்கலாம்" ஐஸ் ஆசையா சொல்லுச்சு.

"ஐயய்யோ... நீ குளிக்கக்கூடாது. நீ தண்ணீலெ எறங்கனா செத்துப்போயிடுவே.

ஞாபம் வச்சுக்கோ. நாங்க ரெண்டுபேரும் குளிக்கப்போறோம். எங்களுக்கு எதுவும் ஆகாது. ஆனா நீ எச்சரிக்கையா இருக்கணும். குளக்கரையோட பக்கத்துக்குக்கூட வந்திராதே என்னா…” வெங்காயம் எச்சரிக்கை செய்திச்சு.

குச்சி ஐஸோட முகம் அப்படியே வாடிப்போச்சு. அது மனசில்லா மனசோடு வெங்காயத்தைப் பாத்து சரிங்கறமாதிரி தலையாட்டிச்சு.

அப்புறம் தக்காளியும் வெங்காயமும் தொப்புத் தொப்புண்ணு தண்ணீலெ குதிச்சுக. தண்ணீரை வாரி ஒருத்தர் மேல ஒருத்தர் அடிச்சுக்கிட்டாங்க. தண்ணீரில முங்கி முங்கி எழுந்தாங்க. அவங்க போடற கும்மாளத்தைப் பாத்து குச்சி ஐஸ்ஸுக்கு தானும் குளிக்கணும்ணு ஆசை வந்திச்சு. அதுவும் தண்ணீலே குதிச்சுது. அவ்வளவுதான். பாவம் குச்சி ஐஸ்! அதோட ஒடம்பு தண்ணீரில கரைய ஆரம்பிச்சுது. கொஞ்சம் கொஞ்சமா கரைஞ்சு அது செத்துப் போச்சு.

குளிச்சு முடிச்சு வெளியே வந்த வெங்காயமும் தக்காளியும் எங்கே குச்சி ஐஸ்ஸைக் காணோமேண்ணு சுத்தும்முத்தும் தேடிச்சுக.

“ஐயோ அங்க பாரு வெறும் குச்சி மட்டும் தண்ணீல மிதக்குது. நாம சொன்னதைக் கேட்காம ஐஸ்ஸும் குளிக்கத் தண்ணீர்ல எறங்கிருக்கு.

ஐயய்யோ… என் நண்பன் செத்துட்டானே அப்படீண்ணு தக்காளி ‘ஓ’ ண்ணு அழ ஆரம்பிச்சுது. அழுதுது அழுதுது. நிறுத்தாம அழுதுது. அழுதுகிட்டே நடந்தது. அப்போ சாலையில ஒரு காளை வண்டி வந்திச்து, கண்ணில தண்ணியோட நடந்த தக்காளிக்கு கண்ணு சரியாத் தெரியல. அது காளை வண்டியோட சக்கரத்தில பட்டு நசுங்கிப் போச்சு. அவ்வளவுதான் வெங்காயம் அழத்தொடங்கிச்சு. அழுதுது. அழுதுது நிறுத்தாம அழுதுது. அழுதுகிட்டே பூசணிமாமாவோட வீட்டுக்குப் போயிருச்சு.

பூசணிமாமா, நீ ஏன் அழுகற? அழுகையை நிறுத்து. என்ன நடந்தது சொல்லுண்ணு கேட்டுது.

குச்சி ஐஸ் செத்துப் போனப்ப அழுறதுக்கு தக்காளியும் நானும் இருந்தோம். தக்காளி செத்துப்போனப்போ அழறதுக்கு நான் இருந்தேன். நான் செத்துப்போனா அழுறதுக்கு யார் இருங்காங்கண்ணு சொல்லிட்டு நிறுத்தாம அழுதது.

பூசணிமாமா ஒரு நிமிடம் யோசிச்சாரு. கவலைப்படாதே. உன்னை யாரு கொல்லறாங்களோ அவங்க அழுவாங்கண்ணு சொல்லிச்சு. அதனாலதான் வெங்காயத்தை யார் உரிச்சாலும் அவங்க அழறாங்க.

நீங்க வெங்காயத்தை உரிச்சிருக்கீங்களா… உரிச்சுப் பாருங்க நீங்களும் அழுவீங்க.


# 8

# பூம் பூம் வண்டி



# பூம் பூம் கார்


சே... சத்தம் காதைப் பிளக்குது!
சே! எவ்வளவு புகை? மூச்சு முட்டுது!


ஏய் ஒதுங்கிப் போ! சீ.. சீ... என்ன வண்டி இது? ஒரே புகை...
நான் பட்டணம் பார்க்கப் போகிறேன்


எங்கிருந்து வந்தது இந்த ஓட்டை வண்டி?
இதென்ன சிவப்பு விளக்கு எரிகிறதே! நான் என்ன செய்யணும்?


நல்லா மாட்டிக்கிட்டியா!
சிகப்பு விளக்கு எரியுதே கண் தெரியவில்லையா? அப்படி ஓரமா நில்லு.


போக்குவரத்து விதிமுறைகள் தெரியாதா உனக்கு? விதியை மீறியுள்ளாய் ரூ. 1000/- அபராதம் கட்டு.
?!


எனக்கு என்னமோ பிரச்சினை பணிமனைக்குப் போகவேண்டியதுதான்...

## சொல்லுங்கள்

- பூம் பூம் வண்டியைப் பிற வண்டிகள் ஏன் திட்டின?
- படத்தில் என்னென்ன வாகனங்கள் உள்ளன?
- போக்குவரத்துக் காவலர் பூம்பூம் வண்டிக்கு அபராதம் விதித்தது ஏன்?

## வரிசைப்படுத்துங்கள்

- படக்கதையை வாசியுங்கள். கதையை வரிசைப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| | சாலைகள் சந்திப்பில் சிவப்பு விளக்கு எரிந்தது. |
| | போக்குவரத்துக் காவலர் அபராதம் விதித்தார். |
| 1 | பூம்பூம் வண்டி பட்டணம் பார்க்கச் சென்றது. |
| | பூம் பூம் வண்டி நிற்காமல் சென்றது. |
| | காளை வண்டி மூக்கைப் பொத்தியது. |
| | வண்டியிலிருந்து நிறையப் புகை வெளிவந்தது. |
| | பூம் பூம் வண்டியைப் பிற வண்டிகள் திட்டின. |

## வேறுபாடு என்ன?

| நான் பார்த்த வண்டி | பூம் பூம் வண்டி |
|---|---|
| | |

## எதைக் குறிக்கும்?

கீழ்க்காணும் விளக்குகள் கூறும் கட்டளை என்ன?



சிவப்பு நிறம் - நில் ______

மஞ்சள் நிறம் - ________

பச்சை நிறம் - ________

## எது சரி?





☒ நாம் சாலையின் வலதுபக்கம் நடக்கக் கூடாது.

☑ நாம் சாலையின் வலது பக்கம் நடக்க வேண்டும்.

☐ வாகனங்கள் சாலையின் இடது பக்கமாகச் செல்லக் கூடாது.

☐ ..........................................................................................

☐ சாலையில் விளையாடலாம்.

☐ ..........................................................................................

☐ பாதசாரிகள் நடக்கும் வழியாக நடக்கக் கூடாது.

☐ ..........................................................................................

## எழுதுங்கள்

இரண்டு நிமிடத்துக்குள் எத்தனை வாகனங்களின் பெயர்களை உங்களால் எழுத முடியும்?


இவற்றுள் உங்களுக்கு மிகவும் பிடித்த வாகனம் எது?

## பொருள் எழுதுங்கள்

சில சாலை அடையாளங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொருள் என்ன?





















# பூம் பூம் காரின் வருத்தம்




“அய்யோ! என்னை எல்லோரும் திட்டுகிறார்களே! எனக்கு என்னவோ பிரச்சினை இருக்கு!” பூம் பூம் கார் யோசித்தது.

பணிமனைக்குச் சென்றது.

“ஐயா! என்னைக் கொஞ்சம் கவனியுங்கள்” என்றது.

“உன்னையா? சரி செய்வதா? ஹா... ஹா... ஹா...” பணிமனைக்காரர் சிரித்தார்.



“ஐயா! என்னை எப்படியாவது சரிசெய்யுங்கள்” பூம்பூம் கார் மீண்டும் கெஞ்சியது.

“சரி... சரி... அப்படி ஓரமாக் கிட” அவர் பூம்பூம் காரை ஒரு ஓரமாகத் தள்ளி விட்டார்.

பூம்பூம் கார் பரிதாபமாக நின்றது. பணிமனையாளர் அதைக் கண்டுகொள்ளவே இல்லை.

புதுப்புதுக் கார்கள் வந்தன. பணிமனைக்காரர் ஓடிஓடி அவற்றைக் கவனித்தார். அக்கார்களோ ஓரமாக நின்ற பூம்பூம் காரைப் பார்த்தன.

“மூலையில் கிடக்கும் வண்டியே!
மூக்கு உடைந்த வண்டியே!”
என்று கேலி செய்து சிரித்தன.



பூம் பூம் கார் தன் பழைய நிலையை எண்ணிப் பார்த்தது.

'ஹய்யா! பூம்பூம் கார் என்று தன்பின்னே ஓடிவந்த சிறுவர்கள் எத்தனைபேர்! என்னை அருகில் வந்து தொட்டுப்பார்க்க முடியாமல் எட்டநின்று வேடிக்கைப் பார்த்தவர்கள் எத்தனைபேர்! என் முதலாளிக்குத்தான் என்னால் எத்தனை பெருமை!' என்றெல்லாம் எண்ணி எண்ணி வருந்தியது.

'அப்படிப்பட்ட நான் இப்படிச் சீந்துவார் இன்றி கிடக்கிறேனே! என் நிலை மாறுமா?' என்று எண்ணி எண்ணி ஏங்கியது.

நாட்கள் நகர்ந்தன. பூம் பூம் காரின் நம்பிக்கை தகர்ந்தது. 'இப்படி மூலையில் கிடந்தே, என் ஆயுள் முடியப்போகிறதோ?' அப்படியிருக்கும் போது ஒருநாள்...

ஒருவர் வந்தார். பூம்பூம் காரைப் பார்த்தார். அவர் கண்கள் மலர்ந்தன. அருகில் வந்தார். காரைச் சுற்றிப் பார்த்தார். பூம் பூம் காரைத் தொட்டுப் பார்த்தார். பூம் பூம் காருக்கு உடல் சிலிர்த்தது. புத்துயிர் பிறந்தது. அதன் செவிகள் கூர்மையாயின. அவர்கள் பேசுவது துல்லியமாகக் கேட்டது.

"ஐயா! இந்த வண்டி என்ன விலை?"

"விலைகிலை ஒன்றுமில்லை! பெஞ்சமின் ஐயாவுக்கு சும்மாவே தருகிறேன்."

"ஓ... அவர் பெயர் பெஞ்சமின் ஐயாவா? பூம்பூம் காருக்கு புது மகிழ்ச்சி பிறந்தது."

அது பெஞ்சமின் ஐயாவுடன் சந்தோஷமாகச் சென்றது. அவரின் வீட்டை அடைந்தது.

"ஓட்டை வண்டி...
உடைசல் வண்டி...
இதை எங்கே பிடித்தீர்கள்?"

ஓடி வந்து பார்த்த பெஞ்சமின் ஐயாவின் மகள் பெஞ்சி சிரித்தாள்.
பூம்பூம் கார் வருந்தியது.



"உண்மையில் இந்தக் காரைப் பிடிக்கவில்லையா?"

"ஐய்யே....!" என்று சொல்லி பென்சி சிட்டாகப் பறந்துவிட்டாள்.

"கவலைப்படாதே! உன்னை எப்படி மாற்றுகிறேன் பார்!"

பெஞ்சமின் ஐயா பூம்பூம் காரைத் தட்டிக் கொடுத்தார்.

இரண்டு நாட்கள் அதனுடனே செலவிட்டார்.

பழுதடைந்த பாகங்களை மாற்றினார்.

புதுச்சக்கரங்களைப் பொருத்தினார்.

எரியா விளக்குகளை எரிய வைத்தார். அழகு வண்ணங்களைப் பூசினார்.

பூம்பூம் கார் துள்ளிக் குதித்தது.

"டுர்ர்...டுர்ர்..." என நன்றி சொன்னது.

அவர் சொன்னபடியெல்லாம் சென்றது.

பள்ளிவிட்டு வந்த பென்சி, தன் வீட்டின் முன் நிற்கும்

புத்தம்புதிய பூம்பூம் காரைப் பார்த்தாள்.

"ஹய்யா!" துள்ளிக் குதித்து ஏறினாள்.

பூம்பூம் காரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தது. கண் சிமிட்டியது.

அலுங்காமல் குலுங்காமல் அழகாய்ச் சாலையில் ஓடியது.



## சொல்லுங்கள்

- பூம்பூம் கார் ஏன் வருந்தியது?
- பூம் பூம் காரை வாங்கியது யார்?
- பூம் பூம் காரைப் பார்த்த மற்ற கார்கள் என்ன சொல்லிக் கேலி செய்தன?
- பூம் பூம் காரைப் பார்த்த பென்சி என்ன சொன்னாள்?

## என்ன சொல்லும்?



நான் மிதிவண்டி. எனக்கு இரண்டு சக்கரங்கள் உள்ளன. நான் எரிபொருள் இல்லாமலே ஓடுவேன். இயந்திரம் கூடத் தேவையில்லை.






## சொல்லுங்கள்

- விலை கொடுக்காமல் என்னென்ன பொருள்கள் உங்களுக்குக் கிடைத்துள்ளன?
- அவற்றுள் உங்களுக்குப் பிடித்த பொருள் எது?
- அதை என்ன செய்தீர்கள்?
- பழுதான ஏதாவது ஒரு பொருளைப் பழுது பார்த்துள்ளீர்களா?

## வரையுங்கள்

படம் வரையுங்கள்; பொருத்தமான வண்ணம் தீட்டுங்கள்.



## எது சரி?

“காரில் எத்தனை சக்கரங்கள் உள்ளன?” குறும்புக்கார மகன் கேட்டான்.

“நான்கு” அப்பா சொன்னார்.

“இல்லை ஐந்து ” மகன் சொன்னான்.

யார் சொல்வது சரி. நீங்களே சொல்லுங்கள்.

## எந்த வாகனம்?

கீழே தரப்பட்டுள்ளவை எந்தெந்த வாகனங்களைக் குறிப்பிடுகின்றன?

| | | |
|---|---|---|
| சரக்குந்து | - | லாரி |
| வானூர்தி | - | |
| மலையுந்து | - | |
| துள்ளுந்து | - | |
| தானி | - | |

## நீங்களாக இருந்தால்

"ஐயா நீங்கள் என்னைக் கொஞ்சம் கவனியுங்கள்" என்றது.

"உன்னையா? சரி செய்வதா? ஹா..ஹா... ஹா..."

பணிமனைக்காரர் சிரித்தார்.

நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

அக்கார்களோ, ஓரமாக நின்ற காரைப் பார்த்தன.

"மூலையில் கிடக்கும் வண்டியே

மூக்குடைந்த வண்டியே" என்று கேலி செய்து சிரித்தன.

நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

"ஓட்டை வண்டி

உடைசல் வண்டி

இதை எங்கே பிடித்தீர்கள்?"

ஓடி வந்து பார்த்த பெஞ்சமினின் மகள் பென்சி சிரித்தாள்.

நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

# அதிசய வண்டி



*"அழகா இருக்குங்க! ரொம்ப அழகா இருக்குங்க – அந்த*
*பறவை பறப்பது ரொம்ப அழகா இருக்குங்க!*
*அழகா இருக்குங்க! ரொம்ப அழகா இருக்குங்க – ஆகாய*
*விமானம் பறப்பது ரொம்ப அழகா இருக்குங்க!"*

பூம் பூம் கார் பாடியது.
"என்ன திடீரென பறக்கும் ஆசை?"
பெஞ்சமின் ஐயா கேட்டார்.
பூம் பூம் கார் பதில் பாட்டு பாடியது.


*"சலிச்சுப் போச்சுங்க! ரொம்ப சலிச்சுப் போச்சுங்க!*
*தரையில் ஓடி ஓடி ரொம்ப சலிச்சுப் போச்சுங்க!*
*ஆசையா இருக்குங்க! ரொம்ப ஆசையா இருக்குங்க*
*ஆகாயத்தில் பறந்து செல்ல ஆசையா இருக்குங்க!"*

பெஞ்சமின் ஐயா ஆலோசித்தார். இரவு பகலாகப் பாடுபட்டார். அங்கும் இங்கும் எங்கும் ஆலோசித்தார்.

பூம் பூம் கார்... 'விர் விர்' ரெனப் பறக்கும் காரானது. வானில் 'சர் சர்' ரெனப் பறந்தது. வானமெங்கும் சுற்றிச் சுற்றிப் பறந்தது. பறந்து பறந்து களைத்தது. கடற்கரையில் தரை இறங்கியது.



‘தஸ் புஸ்’ சென மூச்சு விட்டது. சுற்றும் முற்றும் பார்த்தது.
கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து கிடக்கும் நீலக்கடல்.




‘ஹய்! அங்கு மிதந்து மிதந்து செல்கிறதே! அது என்ன?
ஓ... அதுதான் கப்பலா? அது ஆடி... ஆடி...
எழுந்து.. தாழ்ந்து.. அது மிதக்கும் அழகே அழகு!’

பூம் பூம் காருக்கு ஆசை வந்துவிட்டது. அதுவும் கடலில் மிதக்கும் ஆசை.
அது பெஞ்சமின் ஐயாவிடம் சென்றது.

*“அழகா இருக்குங்க! ரொம்ப அழகா இருக்குங்க – அந்த*
*மீன்கள் நீந்திச் செல்வது ரொம்ப அழகா இருக்குங்க!*
*அழகா இருக்குங்க! ரொம்ப அழகா இருக்குங்க – மிதந்து*
*மிதந்து கப்பல் செல்வது ரொம்ப அழகா இருக்குங்க!”*

“என்ன திடீரென்று நீந்திச் செல்லும் ஆசை?”
பெஞ்சமின் ஐயா கேட்டார்.



பூம் பூம் கார் பதிலுக்குப் பாடியது.

“...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................”

பெஞ்சமின் ஐயா ஆலோசித்தார். இரவு பகலாகப் பாடுபட்டார்.

அங்கும் இங்கும் எங்கும் ஆலோசித்தார்.

பூம் பூம் கார்.... வானில் பறக்கும் கார்....

கடலில் மிதக்கும் கப்பலானது.

‘சர்ர்.. சர்ர்...’

என நீரைக் கிழித்துக் கொண்டு கடலில் பாய்ந்தது.

‘விர்ர்... விர்ர்...’

என வானில் பறந்தது.

‘பூம்.. பூம்...’

எனத் தரையிலும் ஓடியது. உலகெங்கும் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது.

யார் கண்டது?

பூம் பூம் கார் உங்கள்
ஊருக்கும் வரலாம்.

காத்திருங்கள்.



## சொல்லுங்கள்

- பூம்பூம் கார் என்னென்ன வாகனங்களாக மாறியது?
- வானில் பறக்க என்னென்ன மாற்றங்களைப் பெஞ்சமின் ஐயா செய்திருப்பார்?
- கடலில் செல்ல என்னென்ன மாற்றங்களைச் செய்திருப்பார்?
- பூம் பூம் கார் இப்படி மாறியது சரியா? தவறா? ஏன்?

## பாடுங்கள்

- பாடப்பகுதியில் உள்ள பாடல்களுக்கு மெட்டமைத்துப் பாடுங்கள்.
- எத்தனை பாடல்களைப் பாராமல் பாடமுடியும்?

## பாடல் எழுதுங்கள்

- பூம் பூம் கார் பதிலுக்குப் பாடிய பாடலை எழுதுங்கள்.

"..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

.........................................................................................................."

## எழுதுங்கள்

- ஆகாயத்தில் செல்லும் எத்தனை வாகனங்களின் பெயர்களை உங்களால் எழுத முடியும்?

## ஆசை என்ன?

- உங்களுக்கு வானில் பறக்க ஆசையா? கடலில் செல்ல ஆசையா?
- வானில் பறந்தால் என்னென்ன பார்க்கலாம்?
- கடலில் சென்றால் என்னென்ன பார்க்கலாம்?

## என்னென்ன மாற்றங்கள்

- பூம்பூம் காரில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன?

  படங்களைப் பார்த்துக் கண்டுபிடியுங்கள்.

## என்ன செய்வீர்கள்

- பூம் பூம் கார் உங்கள் ஊருக்கு வந்தால்....

| என்னென்ன சொல்வீர்கள்? | என்னென்ன செய்வீர்கள்? |
| --- | --- |
| | |

## முழுமைப்படுத்துங்கள்

- பாடப்பகுதியில் இடம்பெறாதவைகளை இட்டு நிரப்பிப் பாடலை முழுமைப் படுத்துங்கள்.

*“அழகாக இருக்குங்க! ரொம்ப அழகா இருக்குங்க–*

*.................................................................... ரொம்ப அழகா இருக்குங்க*

.................................................................................................................................

.................................................................................................................................”

## எழுதுங்கள்

- கடலில் செல்லும் எத்தனை வாகனங்களின் பெயர்களை உங்களால் எழுத முடியும்?

- இரவு - பகல்

இது போல் காலத்தோடு தொடர்புடைய எத்தனை இணைச் சொற்களை உங்களால் எழுத முடியும்?

## ஒப்பிடுங்கள்


| இரயில் வண்டி | ஆகாய விமானம் | படகு |
|---|---|---|
| தண்டவாளத்தில் ஓடும் | ........................................ | ........................................ |
| ........................................ | வேகமாகச் செல்லும் | ........................................ |
| ........................................ | ........................................ | துடுப்பு போட வேண்டும் |
| ........................................ | ........................................ | ........................................ |

# அதிசய வண்டியில் அற்புதப் பயணம்



பென்சியைப் பார்த்த பூம் பூம் வண்டி மகிழ்ச்சியடைந்தது. அதன் முன் விளக்குகள்“பளிச்.. பளிச்” என விட்டு விட்டு எரிந்தன.

“ஆகா... என்னைப் பார்த்து கண் சிமிட்டுகிறாயா?” பென்சி சிரித்துக்கொண்டே கேட்டாள். ‘ஆம்’ என்று சொல்வது போல் வண்டியில் விளக்குகள் அணையாமல் எரிந்தன. அவள் வண்டியின் அருகே போனாள். கதவு தானாகத் திறந்து கொண்டது. பென்சி வண்டிக்குள் நுழைந்தாள். கதவு தானாக அடைந்து கொண்டது.



இருக்கையிலிருந்த பெல்டு உயர்ந்து வந்தது. அவளை இருக்கையோடு சேர்த்துக் கொண்டது. பென்சிக்கு மகிழ்ச்சியாவும் இருந்தது. அதே நேரத்தில் பயமாகவும் இருந்தது.

அவள் பச்சை நிறப்பொத்தானை அழுத்தினாள். அவ்வளவுதான் பூம் பூம் வண்டி சீறிப் பாய்ந்தது. சாலையில் வண்டிகளுக்கிடையே தானாக வளைந்து நுழைந்து சென்றது. சாலையின் ஓர் இடத்தில்... வரிசை வரிசையாக வாகனங்கள் நின்றன.

“ஆகா போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்டோமா?” பென்சி நினைத்தாள். அப்போது ஒரு மஞ்சள் நிறப் பொத்தான் விட்டு விட்டு எரிந்தது. அவள் அதை அழுத்தினாள்...

பூம் பூம் காரின் மேல் காற்றாடி ஒன்று எழுந்தது. 'விர்' ரெனச் சுழன்றது. அவ்வளவுதான்! வண்டி ஜிவ்வென்று மேலே உயர்ந்தது. பக்கவாட்டில் இரண்டு இறக்கைகளும் நீண்டன. நின்று கொண்டிருந்த வாகனங்களுக்கு மேலாகப் பறந்தது. ஓட்டுநர்களும் நடத்துனர்களும் வெளியே தலையை நீட்டி அந்த அதிசய வாகனத்தைப் பார்த்தனர்.

'எங்களுக்கும் இப்படியொரு வாகனம் கிடைத்தால் எப்படியிருக்கும்!' என்று நினைத்தனர். பென்சிக்குப் பெருமை தாங்கவில்லை. அவள் கீழே பார்த்தாள்..

தீப்பெட்டிகளை அடுக்கி வைத்தது போல் வீடுகள்! எறும்புகள் ஊர்ந்து செல்வது போல் வாகனங்கள்! நீலப்பொட்டுபோல் குளங்கள்! தரையில் கோடு வரைந்தது போல் நதிகள்... !

அப்போது வண்டி அப்படியும் இப்படியும் ஆடியது. பென்சி முன்னால் பார்த்தாள். ஒரு கழுகு பூம் பூம் வண்டியைச் சிறகால் அடித்துக்கொண்டிருந்தது. வண்டி மேகத்திற்குள் நுழைந்தது. கழுகும் விடவில்லை. துரத்தியது.

வண்டித் தாழ்வாகப் பறந்தது. கழுகும் தாழ்வாகப் பறந்தது. வண்டி இடப்புறம் திரும்பினால் அதுவும் இடப்புறம் திரும்பியது. அதனிடமிருந்து தப்பிக்கப் பறந்து.. பறந்து... கடற்கரைக்கே வந்துவிட்டனர். பென்சி பொத்தான்களைக் கவனித்தாள். அதில் ஒரு நீலப் பொத்தான். அவள் அதை அழுத்தினாள்.



வண்டியின் சக்கரங்கள் உள்ளே போயின. வண்டியின் முன்பக்கம் கத்திபோல் கூர்மையானது. பின்பகுதியும் நீண்டது. ஆகா! பூம் பூம் வண்டி படகுபோல் மாறியது. தண்ணீரில் இறங்கியது... நீரைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தது. கழுகு ஏமாந்து திரும்பியது.

நீரலைகளில் ஏறியிறங்கி பூம் பூம் வண்டி பாய்ந்தது.

பார்க்குமிடமெல்லாம் தண்ணீர். கரையே கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. கடல் எவ்வளவு பெரியது!

தொட்டிலில் தாலாட்டுவது போல் கடல் பூம் பூம் வண்டியைத் தாலாட்டியது. பென்சி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். அப்போது ...

“ஆ..அது என்ன வாயைப் பிளந்து கொண்டு... ஐயோ திமிங்கலம்... !”

பென்சி என்ன செய்திருப்பாள்?

## எழுதுங்கள்

- அதிசய வண்டியில் பயணம் செய்த பென்சி, தன் நாட்குறிப்பில் என்ன எழுதியிருப்பாள்?

## சொல்லுங்கள்

- நீங்கள் எந்தெந்த வாகனங்களில் பயணம் செய்துள்ளீர்கள்?
- எங்கெங்குப் பயணம் செய்துள்ளீர்கள்?
- அவற்றுள் பிடித்த பயணம் எது? ஏன்?
- அதிசய வண்டி உங்களுக்குக் கிடைத்தால் எங்கெல்லாம் போவீர்கள்? ஏன்?

## எழுதுங்கள்

- ஏறி இறங்கி, மேடு பள்ளம்

  இதுபோல் எத்தனை தொடர்களை உங்களால் எழுத முடியும்?

  ..............................................................................................................................

  ..............................................................................................................................

## எத்தனை சொற்கள்?

குளம் :- தண்ணீர், தாமரை, மழை, மீன், ..............

- தரப்பட்டுள்ள சொற்களோடு தொடர்புள்ள எத்தனை சொற்களை உங்களால் எழுத முடியும்?

வீடு :-

கொசு :-

அரிசி :-

நாய் :-

தண்ணீர் :-

பசி :-

தொடர் வண்டி :-

## என் பயண அனுபவம்

- நான் சென்ற ஊர் :
- பயணம் செய்த வாகனங்கள் :
- பயணத்தின் போது நிகழ்ந்தவை :
  - ☒
  - ☒
- பார்த்த காட்சிகள் :
  - ☒
  - ☒
- எனக்கு மிகவும் பிடித்த நிகழ்வு :
  - ☒
  - ☒
- எனக்கு மிகவும் பிடித்த காட்சி :
  - ☒
  - ☒